DINA THANTHI

6 OCT 2021

PAGE J2

புதுச்சேரி
பல்கலைக்கழக

# பேராசிரியருக்கு சர்வதேச ஆராய்ச்சி விருது

புதுச்சேரி, அக்.6-

புதுவை பல்கலைக்கழகத்தின் மின்னணு பொறியியல் துறை பேராசிரியர் சண்முகானந்தம். இவரது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியை பாராட்டி இங்கிலாந்தின் சர்வதேச ஆராய்ச்சிக்குழு, சர்வதேச ஆராய்ச்சி விருதினை சண்முகானந்தத்துக்கு வழங்கியுள்ளது. காணொலி காட்சி வாயிலாக பல சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் முன்னிலையில் நடந்த விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது.

விருது பெற்ற பேராசிரியர் சண்முகானந்தத்தை பாராட்டிய பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங், இவ்விருது மின்னணு பொறியியல் துறைக்கு ஒரு மைல்கல்லாக அமைந்து பெருமை சேர்ப்பதாக தெரிவித்துள்ளார்.

THE HINDU
6 OCT 2021
PAGE 3

# International honour for Pondicherry varsity faculty

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

T. Shanmuganantham, Associate Professor, Department of Electronics Engineering, Pondicherry University, has been conferred the 'International Researcher Award 2021' by the International Research Association, United Kingdom (UK).

The award is in recognition of the research contributions of Mr. Shanmuganantham spanning 20 years.

These include 285 Scopus publications as per Scopus database, 112 Web of Science Publications, 115 Articles in ORCID and 30.02 Research Gate points, Pondicherry University said in a press note issued here.

The award was presented at a virtual ceremony held recently.

**Felicitation**

Gurmeet Singh, Vice Chancellor of Pondicherry University, felicitated Mr. Shanmuganatham on the achievement.

The International Research Association has instituted the awards to honour researchers for excellence in various fields of science and technology, the press note said.

DINAKARAN

6 OCT 2021

PAGE 7

# புதுவை பல்கலை பேராசிரியருக்கு சர்வதேச ஆராய்ச்சி விருது



இங்கிலாந்தின் சர்வதேச ஆராய்ச்சி குழுவிடமிருந்து விருது பெற்ற பேராசிரியர் சண்முகானந்தத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

**புதுச்சேரி, அக். 6:** புதுவை பல்கலைக்கழகத்தின் மின்னணு பொறியியல் துறையில் பணிபுரியும் பேராசிரியர் சண்முகானந்தம் இங்கிலாந்தின் சர்வதேச ஆராய்ச்சி குழுவிடமிருந்து சர்வதேச ஆராய்ச்சி விருதினை பெற்றுள்ளார். கடந்த செப்டம்பர் 19ம் தேதி பல சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் இவ்விருது பேராசிரியருக்கு வழங்கப் பட்டது. இத்தகைய உயரிய விருது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் இவருடைய ஆராய்ச்சி தொகுப்புகளை பாராட்டும் வகையில் அமைந்துள்ளது.

மேலும் பேராசிரியர் சண்முகானந்தம் ஆராய்ச்சி பங்களிப்புகளின் தனித்தன்மை, தொடர் கண்டுபிடிப்பு முதலானவற்றை கொண்டிருக்கின்றன என்பதை அங்கீகரிக்கும் வகையிலும் இந்நிகழ்வு அமைந்துள்ளது. விருது பெற்ற பேராசிரியரை, துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.